(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 337.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2014 சனவரி 24, வெள்ளிக்கிழமை, பி.ப. 1.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2824/ '12

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உரிய செயல்முறைகளைப் பின்பற்றாமல் முப்படைகளை விட்டு விலகிய நபர்களின் எண்ணிக்கையினையும்;

(ii) படைகளை விட்டு அவர்கள விலகுவதற்கான காரணங்களையும்;

(iii) அவர்களுக்கெதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கையையும்;

(iv) அவ்வாறு விலகுவது இடம்பெறுவதைத் தடுப்பதற்கு எடுக்கப்படுகின்ற நடவடிக்கையினையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) கடந்த 3 வருடங்களாக முப்படைகளுக்கும் ஏற்பட்ட செலவினை வருடாந்த அடிப்படையில் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2921/ '12

2.

கௌரவ புத்திக பதிரண,— இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திக்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவின், கோட்டேகொட, பெலிதெனிய பிரதேசத்தில் அமைந்துள்ள தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைக்குச் சொந்தமான கட்டடம் எவ்வித அறவீடுமின்றி தேசிய பயிலுனர் சபைக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) தேசிய பயிலுனர் சபையினால் 2011 ஆம் ஆண்டு யூன் 25 ஆம் திகதியன்று அக்கட்டடத்தில் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிலையத்தில் பாடநெறிகளை ஆரம்பிக்கும் பொருட்டு இடம்பெற்ற அங்குரார்ப்பண விழாவுக்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பயிற்சி நிலையம், அது ஆரம்பிக்கப்பட்ட தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைக்கு சொந்தமான கட்டடத்திலிருந்து அகற்றப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) தற்போது மேற்படி பயிற்சி நிலையம் நடாத்தப்படும் புதிய இடம் யாதென்பதையும்;

(iv) அக்கட்டடத்திற்காக செலுத்தப்படுகின்ற மாதாந்த வாடகைத் தொகை எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி கட்டடத்தின் உரிமையாளரின் பெயரும் முகவரியும் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3383/'12

3.

கௌரவ பி. ஹரிசன்,— வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் உருவாக்க எதிர்பார்க்கப்படுகின்ற இயற்கைக் காட்டு யானை பாதுகாப்பு நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நிலையத்தினதும்,

(i) பெயர், அமைவிடம், பரப்பளவு மற்றும் நிர்மாணிப்பதற்காக மதிப்பிடப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) எதிர்பார்க்கப்படும் பணிகள் யாவை;

(iii) நிர்மாணிக்கப்படும் மின்சார வேலிகளின் நீளம் மற்றும் அவற்றை நிர்மாணிப்பதற்காக ஒதுக்க எதிர்பார்க்கப்படும் பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(vi) மின்சார வேலிகளை பராமரிப்பதற்காக ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் அதற்கு செலவாகும் பணத் தொகை எவ்வளவு;

(v) ஒரு நிலையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படும் உத்தியோகத்தர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) ஹொரவ்பத்தான காட்டு யானைகள் பாதுகாப்பு நிலையத்தில்,

(i) நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வாவிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றுக்காக மதிப்பிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு;

(ii) நிர்மாணிக்கப்படும் புற்தரைகளின் எண்ணிக்கை மற்றும் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு;

(iii) யானைகளை புனர்வாழ்வளிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் காலம் எவ்வளவு;

(iv) புனர்வாழ்வளிக்கப்படும் அந்த யானைகள் விடுவிக்கப்படும் பிரதேசங்கள் யாவை;

(v) புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்படும் யானைகள் தொடர்பாக பின்னாய்வு மேற்கொள்ளப்படுமாயின், அது எவ்விதத்தில் மேற்கொள்ளப்படும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4095/ '13

4\.

கௌரவ அனுர திஸாநாயக்க,— தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற பால்மா வகைகளில் உடலுக்கு பாதகமான ஆக்கக்கூறுகள் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், பால்மா வகைகளில் உள்ளடங்கியுள்ள உடலுக்கு பாதகமான ஆக்கக்கூறுகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஆக்கக்கூறுகளை கொண்டுள்ள பால்மா வகைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பால்மா வகைகளில் அடங்கியுள்ள பாதகமான ஆக்கக்கூறுகள் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொண்ட நிறுவனம் யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட விடயத்துக்கேற்புடைய ஆராய்ச்சி நடவடிக்கைகள் வெளிநாட்டு ஆய்வு கூடங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி வெளிநாட்டு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ள குறிப்பிட்ட ஆராய்ச்சி அறிக்கைகளில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் யாவையென்பதையும்;

(iv) பாதகமான ஆக்கக்கூறுகளை கொண்டுள்ள பால்மா வகைகள் மற்றும் குறித்த பால்மா வகைகளின் இறக்குமதியாளர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2825/ '12

5\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அரச துறையில் உருவாக்கப்பட்டுள்ள வேலைவாய்ப்புக்களின் எண்ணிக்கையையும்;

(ii) 2007, 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழகங் களிலிருந்து வெளியேறிய பட்டதாரிகளின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(iii) நாட்டில் தற்போதுள்ள வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கையையும்;

(iv) அரச துறையிலுள்ள பட்டதாரியொருவருக்கு வழங்கும் சராசரி சம்பளத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2926/ '12

6\.

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் தேசிய கல்வி ஆணைக்குழுவுக்கு வழங்கியுள்ள பணத்தொகை யாது;

(ii) மேற்படி பணத்தை செலவழித்து மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள் யாவை;

(iii) மேற்படி கருத்திட்டங்களை முகாமைத்துவம் செய்தவர்கள் யாவர்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டங்களுக்கு பணம் செலவிடப்பட்டமை குறித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அதன் மூலம் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் யாவை;

என்பதை குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3384/ '12

7.

கௌரவ பி. ஹரிசன்,— வன சீவராசிகள், வளப்பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1950 ஆம் ஆண்டின் பின்னர் இந்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட யானைகள் தொகை மதிப்பீடுகளின் எண்ணிக்கை, அவை நடாத்தப்பட்ட வருடங்கள் மற்றும் ஒவ்வொரு மதிப்பீட்டினதும் தகவல்கள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட யானைகள் தொகை மதிப்பீட்டுக்குச் செலவு செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு;

(ii) அதன் அறிக்கையைச் சமர்ப்பிப்பாரா;

(iii) இன்றேல், அதற்கான காரணம் யாது;

(iv) இவ்வறிக்கையின் படி அதிகரித்துள்ள யானைகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு அவற்றைப் பராமரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கு காட்டு யானைகளையும் வன விலங்குகளையும் கண்டுகளிப்பதற்கான இடங்கள் அமைக்கப்பட்டுள்ளனவா;

(ii) அவ்விடங்கள் யாவை;

(iii) ஓர் உல்லாசப் பிரயாணியிடமிருந்து இவ்விடங்களில் அறவிடப்படும் பணத்தொகை எவ்வளவு;

(iv) கடந்த ஐந்து வருடங்களில் இவ்வாறான இடங்களிலிருந்து ஈட்டப்பட்டு அரசுக்கு வழங்கப்பட்ட வருமானம் வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) வன சீவராசிகள் பேணல் திணைக்களத்தால் வன சீவராசிகள் பேணல் மேம்பாட்டிற்கு வழங்கப்படும் பங்களிப்பு தொடர்பாக ஒரு அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

(ii) வன நிலப்பரப்பு குறைந்துள்ளதனால் தமது இருப்பு தொடர்பில் ஆபத்துக்குள்ளாகியுள்ள வன விலங்குகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

4096/ '13

8.

கௌரவ அனுர திஸாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு மே மாதம் 01 ஆம் திகதி வரை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் அறவிடப்பட வேண்டியுள்ள மொத்த கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கடன்களை செலுத்தவேண்டியுள்ள ஆட்கள் அல்லது நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திலிருந்து அல்லது ஆளிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள கடன் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கடனை அறவிடுவதற்காக வகுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3226/ '12

9.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மூன்றாவது குழந்தையைப் பெற்றெடுக்கின்ற ஆயுதப்படை ஆளணியினருக்கு நிதி உதவி வழங்கப்படல் வேண்டும் என்னும் 2012ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டப் பிரேணையின் மூலம் இற்றை வரை பயன்பெற்ற ஆயுதப்படை ஆளணியினரின் எண்ணிக்கையையும்;

(ii) மேலே சொல்லப்பட்ட பயன் பெறுநர்களின் பெயர்களை அவர்கள் வதியும் தேர்தல் தொகுதி மற்றும் மாவட்டங்களுடனும்;

(iii) மேலே சொல்லப்பட்ட வரவு செலவுத் திட்டப் பிரேரணையின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள மொத்தக் கொடுப்பனவுகளையும்;

(iv) அவர்களின் நலனை உண்மையாகவே கவனத்திற்கொண்டு அவர்களுக்கு முதலாவது மற்றும் இரண்டாவது குழந்தைகள் கிடைக்கின்ற சந்தர்ப்பத்திலும் ஆயுதப்படை ஆளணியினருக்கு அரசாங்கம் நிதி உதவியளிக்க முடியுமா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## அனுதாபப் பிரேரணை

1.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ டீ.ரீ. பஸ்குவல்.

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2014, பெப்புருவரி மாதம் 5ஆம் திகதி, புதன்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

தேசிய தொழில்துறை முகாமைப் பயிற்சி நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 6.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

9.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

10.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

11.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

12.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

13.

மைத்திரிபால சேனாநாயக்க மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

14.

ஹேண்ட்ஸ் பொ எடியுகேஷன் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

15.

சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டலய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

16.

பௌத்த விகாரைகளை மறுசீரமைத்தல் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.